அன்புள்ள பெற்றார் / பராமரிப்பாளர் திகதி



## <u>பாடசாலை வரவு</u>
## <u>பெற்றோர்களுக்கான தகவல்</u>

உள்ளூர் பாடசாலை ஒன்றுடன் உங்கள் பிள்ளை இப்போது பதிவு செய்யப்பட்டுள்ளதால் ஒழுங்கான பாடசாலை வரவு பற்றிக் கவனிக்கும் உங்கள் பொறுப்புக்களைப் பின்வரும் தகவல் விளக்குகின்றது.

- கட்டாய பாடசாலை வயதுள்ள (5 – 16 வருடங்கள்) எல்லாப் பிள்ளைகளும் ஒழுங்கான முழுநேரக் கல்வியைப் பெற வேண்டும் எனச் சட்டம் கூறுகின்றது.

- எல்லா மாணவர்களினதும் வரவை உள்ளூர் கல்வி அதிகாரசபை (LEA) மிகக் கவனமாக அவதானிக்கும். அத்துடன், ஒரு பிள்ளை ஒழுங்காகப் பாடசாலைக்கு வராவிட்டால், அது பற்றி விசாரணை செய்யும்.

- ஒவ்வொரு நாளும் நேரத்துக்குத் தங்கள் பிள்ளை பாடசாலைக்குச் செல்லுகின்றது எனப் பார்த்துக்கொள்ளல் பெற்றாரின் சட்டரீதியான பொறுப்பாகும்.

- ஒழுங்கான பாடசாலை வரவைத் தடை செய்யக்கூடிய பிரச்சனைகள் உங்கள் பிள்ளைக்கு இருந்தால், கூடிய சீக்கிரம் பாடசாலையைத் தொடர்புகொள்ளுதல் முக்கியமாகும்.

- உங்கள் பிள்ளையின் கல்வியுடன் தலையிடக்கூடிய எந்த விடயங்கள் பற்றியும் உதவ பாடசாலை மகிழ்ச்சியாக இருக்கும். மாறாக, பாடசாலையின் கல்வி நல்வாழ்வு அதிகாரி ஆதரவு தர மகிழ்ச்சியடைவார்.

இந்த விடயத்தில் உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.